
## திராவிடத்தால் வாழ்கிறோம்

938

எழுத்து:
கோவி.லெனின்
ஓவியம்:
கி.சொக்கலிங்கம்




-வாழ்வோம்

## உடன்பிறப்பே

**நீரை.மகேந்திரன்**

124


ஓவியம் : ரவி பேலட்

**தி.மு.கழக வரலாற்றில் இடம் பிடித்த தீரர்களை வாராவாரம் இங்கு நினைவுகூர்ந்து வருகிறோம். அந்த வகையில், பெரியாரின் தொண்டராக, அண்ணாவின் தம்பியாக, கலைஞரின் உடன்பிறப்பாகப் பயணித்து, கழகம் வளர்த்த க.வீரைய்யா அவர்களின் வரலாற்றினைப் பார்க்கலாம்.**

# க.வீரைய்யா! அரிசி ஆலையில் இருந்து கழக அரசியல்!

புதுக்கோட்டை மாவட்டத்தின் முதல் மகளிர் அரசுக் கல்லூரி, 1969-ஆம் ஆண்டு கழக ஆட்சிக் காலத்தில் தொடங்கப்பட்டது. முதலில் இயங்கிய இடம் விஜயரகுநாத புரம். அந்த இடம் சமஸ்தான காலத்தில் ஏழை எளிய மக்கள் உண்டு உறைவிடப் பள்ளியாக செயல்பட்ட இடம். பின்னர், தற்போது இயங்கிவரும் இடம் தேர்வு செய்யப்பட்டு கட்டடங்கள் கட்டப்பட்டன.

கல்லூரி அமைவதற்குக் காரணமாக இருந்ததுடன், கட்டடப் பணிகள் தங்கு தடையில்லாமல் நடக்க, புதுக்கோட்டை நகர நிர்வாகம் துணையாக நின்றது. நகர் மன்றத் தலைவராக மகளிர் அரசுக் கல்லூரி அமைவதற்கு முழுமுற்றாக துணை நின்றவர் க.வீரைய்யா. கல்லூரி முதல் அமைப்புக் குழுவில் இடம்பெற்றிருந்தவர். அன்று அந்தக் குழு திரட்டிய 5 லட்ச ரூபாய்தான், இன்று புதுக்கோட்டை மாவட்டத்தின் பெண்கள் கல்வி வளர்ச்சிக்கான விதை.

1972-73 கல்வியாண்டில் புதிய வளாகத்தில் கல்லூரி இயங்கத் தொடங்கியது. நகர்மன்றத் தலைவராக கல்லூரி அமைய காரணமாக இருந்த வீரைய்யா, அப்போது புதுக்கோட்டை நாடாளுமன்ற உறுப்பினராக, விழாவில் முன்னிலை வகித்தார். முக்கியமாக, மன்னர் பரம்பரையைச் சேர்ந்த ஆர்.விஜயரகுநாத தொண்டைமானை எதிர்த்து வெற்றி பெற்றது அன்றைய காலத்தில் பேசுபொருளாக இருந்தது. கழகத்தின் வெற்றிவாய்ப்பைத் தீர்மானகரமாக அறிந்தவர் கலைஞர் என்பதை, ஆர்.வீரைய்யாவை வேட்பாளர் ஆக்கியதன் மூலம், 1971 தேர்தலில் புதுக்கோட்டை உணர்ந்தது. அந்த ‘உடன்பிறப்பு’ பெரியாரின் ஈரோட்டுப் பாசறைத் தயாரிப்பு. ‘குடிஅரசு’ அச்சகத்தில் அச்சுக் கோர்ப்பவராக பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர் ஆகியோருடன் நட்பு பாராட்டிய கழக முன்னோடி.

**பெரியார் பாசறையில்...**

புதுக்கோட்டை மாவட்டம், ஆலங்குடி வட்டம், முள்ளூர் ஊராட்சியில் முத்துக்கோன் பட்டியில் 1930 ஜனவரி 11-ஆம் தேதி பிறந்தவர். புதுக்கோட்டையில் ஸ்ரீ பிரகதாம்பாள் உயர்நிலைப் பள்ளியில் பள்ளிக்கல்வி வரை பயின்றவர். பெற்றோர் கருப்பையா - அம்மணி அம்மாள். விவசாய பின்புலம் கொண்ட ஓரளவு செல்வாக்குக் கொண்ட குடும்பம். சுயமரியாதை, பகுத்தறிவுக் கருத்துகளால் ஈர்க்கப்பட்டு, பெரியார் பாசறையில் இணைந்து பயணிக்கலானார். கழகத்தின் தொடக்க கால உறுப்பினராக, கழக ஏடுகள் வீரைய்யனைப் பதிவு செய்துள்ளன. இவரது அடியொற்றியே இவரது சகோதரர் க.சிதம்பரம் அவர்களும் பயணப்படலானார். கழகப் பணிகளில் இருவரது செயல்களும் பிரித்துப் பார்க்க முடியாத வகையில், மாவட்டக் கழக நிர்வாகிகளுடன் இணைந்தே இருந்தன என்கின்றனர், மாவட்டக் கழகத்தினர்.

ஒருங்கிணைந்த திருச்சி மாவட்டமாக இருந்தபோது, கழக முன்னோடி அன்பில் அவர்களுடன் இணைந்து, மாவட்டக் கழகப் பொருளாளர் என்கிற பெரும் பொறுப்பினை ஏற்று பணியாற்றி வந்தவர் வீரைய்யா. பின்னர், புதுக்கோட்டை மாவட்டம் பிரிக்கப் பட்டபோது, மாவட்டக் கழகப் பொருளாளராக இவரது சகோதரர் சிதம்பரத்தையே நியமித்தார் தலைவர் கலைஞர்.

மாவட்டக் கழக முன்னோடிகள் பெரியண்ணன், காடுவெட்டி தியாகராஜன், கீரை தமிழ்ச்செல்வன், வடகாடு நல்லத்தம்பி, கே.வி.சுப்பையா என கழக நிர்வாகிகளுடன் இணைந்து, பல பணிகளை முன்னெடுத்துச் சென்றவர்கள் க.வீரையனும் சிதம்பரம் அவர்களும். கழகப் பொறுப்பில் சிதம்பரம் அவர்கள் செயல்பட்டபோது, நாடாளுமன்ற உறுப்பினராக வீரைய்யா அவர்கள் செயல்பட்டார்.

பேரறிஞர் அண்ணா அவர்களின் மறைவுக்குப் பின்னர், சென்னையில் அமைந்துள்ள பேரறிஞர் அண்ணா சிலைபோலவே, புதுக்கோட்டையில் நிறுவியது மாவட்டக் கழகம். அதற்கு பெரும் துணையாக நின்றவர் வீரைய்யா. மாவட்டக் கழகத்துக்குச் சொந்த கட்டட முயற்சியிலும் வீரைய்யா அவர்களின் பங்கு கணிசமானது.

**31 ஆண்டுகளைக் கடந்து மாவட்டக் கழகத்தினர் இன்றும் வீரைய்யா அவர்களின் நினைவுகளைப் போற்றுவது அவரது கழகப் பணிக்கான சான்று. வீரைய்யா காலம் கடந்தும் நினைவில் நிற்பார்.**

**இருவரும் ஒருவராக...**

தேர்தல் களம், தலைமைக் கழகம் அறிவிக்கும் போராட்டக் களம் அனைத்திலும் சகோதரர்கள் இருவரையும் பிரித்துப் பார்க்க முடியாது. இருவரில் ஒருவர் கைது சிறைவாசம் என சளைக்காமல் சென்றவர்கள். வீரையன் அவர்கள் மாவட்ட அவைத்தலைவர், சொத்துப் பாதுகாப்புக் குழு என பொறுப்புகளில் செயல்பட்டவர் என்றால், க.சிதம்பரம் அவர்கள் மாவட்டக் கழகப் பொருளாளர், புதுக்கோட்டை ஒன்றியக் கழகச் செயலாளர், மாவட்டக் கழகச் செயலாளர் என கழகப் பணிகளில் சிறப்புடன் செயல்பட்டவர் என கழகத்தினர் குறிப்பிடுகின்றனர்.

1980 காலகட்டத்தில் புதுக்கோட்டையில் கழகப் பொதுக்குழுக் கூட்டம், நடத்துவதற்கு கடும் நெருக்கடிகள் ஏற்பட்டபோது, தங்களுக்குச் சொந்தமான நெல் அரைவை மில்லில் மிகப் பிரமாண்டமாக, கழக மாநாடுபோல பொதுக்குழுக் கூட்டத்தை, மூன்று நாட்கள் நடத்திக் காட்டியவர் வீரைய்யா என அந்த காலகட்டத்தைப் பதிவு செய்கிறார் புதுக்கோட்டை கவிச்சுடர் கவிதைப்பித்தன்.

1988-ஆம் ஆண்டு, புதுக்கோட்டைக்கு கலைஞரின் பயணத்தின்போது மறுவாழ்வு இல்லத்துக்கு நீண்ட கால பயனளிக்கும் வகையில், 5 லட்ச ரூபாய் வைப்புத்தொகையை வழங்கும் நிகழ்வினை ஏற்பாடு செய்தார் வீரைய்யா. அந்தத் தொகை இன்றுவரை அவர்களுக்குப் பயனளித்து வருகிறது என்கின்றனர்.

1993-ஆம் ஆண்டு, கழகத்துக்கு மிகச் சோதனையான காலகட்டத்தில் செப்டம்பர் மாதம் 12-ஆம் தேதி எதிர்பாராத வகையில், இயற்கை எய்தினார் க.வீரைய்யா. உட்கட்சிக் குழப்பங்கள் நீடித்து வந்த சமயத்தில், அதையும் சமாளித்துக் கொண்டு, பழனி, ராணிப்பேட்டை இடைத்தேர்தல் பிரச்சாரத்தில், கலைஞர் தீவிரமாக ஈடுபட்டிருந்த நேரம், வீரைய்யா அவர்களின் இழப்பு அமைந்தது. பேராசிரியர் அவர்களுடன் மாவட்டக் கழகமே திரண்டு வந்து அவருக்கு மரியாதை செய்தது. அந்த நாட்களின் நெருக்கடியை, ‘நெஞ்சுக்கு நீதி’ 4-ஆம் பாகத்தில் பதிவு செய்துள்ளார் கலைஞர். பின்னர், வீரைய்யா அவர்களின் நினைவு மண்டபத்தைத் திறந்து வைத்து உரையாற்றினார்.

வீரைய்யா அவர்களின் குடும்ப நிகழ்வுகள் அனைத்தும் கலைஞர் தலைமையில்தான் நடந்துள்ளன. சிதம்பரம் அவர்களின் மகள் மாதவி திருமண நிகழ்வின்போது, கலைஞர் அவர்கள் “நெருப்பு சுடும் என்று சொல்வார் வீரைய்யா, சுடும் என்று தெரிந்தும் விரலை வைப்பார் தம்பி சிதம்பரம்” என்று இருவரையும் பெருமை பாராட்டி இருக்கிறார்.

புதுக்கோட்டை மாவட்டக் கழகத்தின் பல முக்கிய முடிவுகள், ஊராட்சி மன்றத் தேர்தல் தொடங்கி, சட்டமன்ற- நாடாளுமன்றத் தேர்தல் பணிமனைப் பொறுப்புகள் எல்லாம் மாதவி அரிசி ஆலையில் இருந்து இயக்கும் அளவுக்கு மாவட்டக் கழக முன்னோடிகளுடன் இணைந்து செயல்பட்டவர் வீரைய்யா என மாவட்டக் கழகத்தினர் அவரது நினைவு நாளில் பகிர்ந்து கொண்டுள்ள உரைத் தொகுப்புகளில் பெருமையுடன் குறிப்பிடுகின்றனர். 31 ஆண்டுகளைக் கடந்து மாவட்டக் கழகத்தினர் இன்றும் வீரைய்யா அவர்களின் நினைவுகளைப் போற்றுவது அவரது கழகப் பணிக்கான சான்று. வீரைய்யா காலம் கடந்தும் நினைவில் நிற்பார்.

...துடிக்கும்

## ‘திருடப்பட்ட குடியரசு’ கருத்தரங்கம்!




மக்களவைத் தேர்தலின்போது, மகாராஷ்டிரா மாநிலத்தில் நடைபெற்ற தேர்தல் முறைகேடுகளை, காங்கிரஸ் தலைவர் ராகுல் காந்தி கடந்த ஆண்டு அம்பலப்படுத்தினார். சட்டமன்றத் தேர்தலுக்கும் நாடாளுமன்றத் தேர்தலுக்கும் இடைப்பட்ட காலத்தில் சேர்க்கப்பட்ட புதிய வாக்காளர்களின் வாக்குகள் எப்படி பா.ஜ.க. கூட்டணிக்கே சென்றன என்பது பலத்த சந்தேகத்தை ஏற்படுத்தியது. அதனைத் தொடர்ந்து கர்நாடகாவின் மகாதேவபுரம் சட்டமன்றத் தொகுதியில் நடைபெற்ற முறைகேடுகளை சமீபத்தில் அம்பலப்படுத்தினார்.

இதனிடையே பீகாரில் வாக்காளர் பட்டியலில் இருந்து 65 லட்சம் பேருக்கு அதிகமானோர், சிறப்புத் தீவிர திருத்தத்தின்படி நீக்கப்பட்டது பெரும் அதிர்ச்சியைக் கிளப்பியது. ஆதாரைக் கூட ஆவணமாக ஏற்காமல், சாமானிய மக்களின் வாக்குரிமை பறிக்கப்பட்டதற்கு எதிராக அம்மாநிலத்தில் கொந்தளிப்பு ஏற்பட்டுள்ளது.

இவற்றையெல்லாம் முன்வைத்து, ‘வாக்குத் திருட்டு’ என்ற மாபெரும் பிரச்சாரத்தை, நாடு தழுவிய அளவில் முன்னெடுத்து வருகிறார் ராகுல் காந்தி.

உச்சநீதிமன்றத்திலும் இதுதொடர்பான வழக்கு விசாரணை நடைபெற்று வருகிறது. நாடு முழுவதும் விவாதத்தை ஏற்படுத்தியுள்ள இவ்விவகாரம் குறித்து, வாய்ஸ் ஆஃப் டி.என். (Voice of TN) அமைப்பு ‘திருடப்பட்ட குடியரசு’ என்ற தலைப்பில், இன்று (23.08.2025) அன்பகத்தில் கருத்தரங்கம் ஏற்பாடு செய்துள்ளது. பொருளாதார நிபுணர் பரகல பிரபாகர், மூத்த பத்திரிகையாளர் சாகர், பீகாரில் நேரடி கள ஆய்வு மேற்கொண்ட ஊடகவியலாளர் கரிகாலன் ஆகியோர் கருத்துரையாற்றவுள்ளனர். அரசியலமைப்புச் சட்டம் நமக்கு வழங்கியுள்ள அடிப்படை உரிமையான வாக்குரிமையைப் பாதுகாக்க வேண்டியதன் அவசியத்தைப் புரிந்துகொள்ளும் வாய்ப்பாக இக்கருத்தரங்கம் அமையும்.

## ஃப்ளாஷ்பேக்


பொன்னுதுரை அந்தோணி



### தலைவரிடம் பெற்ற வாழ்த்து!

2008-இல் சென்னை, தியாகராயர் நகர் மேற்குப் பகுதிக்கு உட்பட்ட 130 - ‘அ’ வட்டப் பொருளாளராக எனது தந்தை பூம்புகார் அந்தோணி நியமிக்கப்பட்டார். கழகத்தின் அன்றைய இளைஞர் அணிச் செயலாளர் - இன்றைய தலைவர் அவர்கள், புதிதாக நியமிக்கப்பட்ட அனைத்து நிர்வாகிகளையும் அப்போது அறிவாலயத்தில் சந்தித்து வாழ்த்தினார். அதையொட்டி, எனது தந்தையும் அழைக்கப்பட்டிருந்தார். அப்போது நானும் எனது தந்தையும் சென்று, தலைவரைச் சந்தித்து சால்வை அணிவித்து வாழ்த்துப் பெற்றது மறக்க இயலாத நிகழ்வு. அன்றைய மாவட்டக் கழகச் செயலாளர் ஜெ.அன்பழகன் அவர்களும் அன்று உடனிருந்தார்.

**- பொன்னுதுரை அந்தோணி, தொகுதி ஐ.டி.விங் ஒருங்கிணைப்பாளர், தியாகராயர் நகர், சென்னை.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018.
வாட்ஸ்அப் எண் : 90033-24473 மின்னஞ்சல்: youthwing@dmk.in

## கருவூலம்

### மும்முனைப் போராட்டம், வழக்கு!

1953-ஆம் ஆண்டு மும்முனைப் போராட்டத்தில் கலந்துகொள்ளத் திட்டமிட்ட பேரறிஞர் அண்ணா, நாவலர், கே.ஏ.மதியழகன், ஈ.வெ.கி.சம்பத், என்.வி.நடராசன் ஆகிய ஐவரும் 10 நாட்கள் சிறையில் வைக்கப்பட்டு, பின் அவர்கள் மீது, இ.பி.கோ.-117, 341, 188 பிரிவுகளின்படியும் சென்னை போலீஸ் ஆக்ட்-41-வது பிரிவின்படியும் இண்டியன் ரயில்வே ஆக்ட்-108, 128 ஆகிய பிரிவுகளின்படியும் குற்றம் சாட்டி, ஜூலை 24-ஆம் நாள் வழக்குப் பதிவு செய்தனர்.

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 28179191, 28179131